பக்கங்கள் 20 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 03

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 17 வியாழக்கிழமை 30.05.2024 அதிர்வு 304






# சுழிபுரத்தில் கடற்படைக்குக் காணி சுவீகரிக்க முயற்சி; மக்களின் கடும் எதிர்ப்பால் அளவீட்டுப் பணி நிறுத்தம்!

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், சுழிபுரம் கிழக்கு, காட்டுப்புலத்தில் உள்ள கடற்படை முகா முக்காகப் பொதுமக்களின் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான அளவீட்டு நடவடிக்கைகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டு அளவீட்டுப் பணிகளுக்காக வருகை தந்த அதிகாரிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சங்கானை பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட காட்டுப்புலம் கடற்படை முகாம் அமைந்துள்ள பொதுமக்களின் காணிகளை நிரந்தரமாகக் கையப்படுத் தும் விதமாக இன்று காலை 9 02

# தனியார் காணிகளைப் படையினருக்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், பிரபாகரன் டிலக்சன்)

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனி யார் காணிகளைப் படைத் தரப்புக்கு வழங்குவதற்கு அளவீடு செய்வ தில்லை என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.**

**யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொ ழில் அமைச்சர் டக்ளஸ்** 03



# நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் புறக்கணிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புறக் கணித்தனர்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செய லக கேட்போர் கூடத்தில் இன்று நடை பெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் நிர்வாக சேவை 03

# பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குத் திரும்புமாறு பணிப்பு



நாட்டைக் காக்கும் நாளைய தலை வர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத் து தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் 04




# சுழிபுரத்தில் கடற்படைக்குக் காணி சுவீகரிக்க முயற்சி; மக்களின் கடும் எதிர்ப்பால் அளவீட்டுப் பணி நிறுத்தம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் அளவீட்டுப் பணிக ளுக்காக நில அளவை திணைக்களத் தின் அதிகாரிகள் வருக வந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் நில அளவை திணைக்கள அதிகாரிகளைத் தடுத்து நிறுத்தி திருப்பினர்.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்க ளுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் பொதுச் செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் பின்னர் கடற்படை முகாமுக்காகச்



சுவீகரிக்கப்படவிருந்த பொதுமக்களின் காணிகளை நாடா ளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந் திரன் பார்வை யிட்டதோடு அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடினார்.
















## சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரி

# காணாமல்போரின் உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம்!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க அலுவலகத்துக்கு முன்பாக ஏ - 9 வீதியில் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது சொந்தங்களின் படங்களையும் பதாகைகளையும் தாங்கியவாறு சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





### யாழ்ப்பாணம்...

இன்று கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இன்று காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதாரத்துறை, விவசாயம், காணி விடுவிப்பு, நீர்வளம், சமூக பாதுகாப்பு நலன்புரி விடயங்கள், வீட்டுத்திட்டம், மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறும் செயற்றிட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், செல்வராசா கஜேந்திரன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### தனியார்...

தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் இன்று நடைபெற்றது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்தார். அதனை நாடாளுமன்ற உறுப் பினர் அங்கஜன் இராமநாதன் வழிமொழிந்தார். அதையடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"யாழ். சுழிபுரத்தில் இன்று கடற்படையினருக்கு முகாம் அமைப்பதற்காகத் தனியார் காணிகளை நில அளவைத் திணைக்களத்தினர் அளவீடு செய்ய முயன்றதால் அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதையடுத்து காணி அளவீடு இடைநிறுத்தப்பட்டது. எனவே, இனி வரும் காலத்தில் படையினருக்காக நிலம் சுவீகரிப்பதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் தனியார் காணிகளை அளவீடு செய்ய முயல்வதனை நிறுத்த வேண்டும்" - என்று நாடாளுமன்ற உறுப் பினர் சிறீதரன் மேற்படி கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில், "படையினருக்கு நிலத்தை சுவீகரிக்க அளவீடு செய்து தருமாறு பிரதேச செயலாளர்கள் எமக்குக் கடிதம் அனுப்பிவிட்டு அதனைப் படையினருக்கும் தெரியப்படுத்துகின்றனர். அதனால் படையினர் எமது அலுவலகத்துக்கு வருகை தந்து அளவீடு செய்து தருமாறு கோருவதனாலேயே நாம் செல்கின்றோம். பிரதேச செயலாளர்கள் கடிதம் அனுப்பினால் அதனை நாம் அளவீடு செய்ய வேண்டியது கட்டாயம். எனவே, எமக்குக் கடிதம் அனுப்ப வேண்டாம் எனப் பிரதேச செயலாளர்களை அறிவுறுத்துங்கள்." - என்று நில அளவைத் திணைக்கள அதிகாரி தர்மபாலன் தெரிவித்தார்.

இதன்போது தனியார் காணிகளை படைத் தரப்புக்கு வழங்குவதற்கு அளவீடு செய்வதில்லை என்ற தீர்மானத்தை சிறீதரன் எம்.பி. முன்மொழிய அதனை அங்கஜன் எம்.பி. வழிமொழிந்தார். அதையடுத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### நிர்வாக...

அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை.

நிர்வாக சேவை அதிகாரிகளின் இந்தப் பணிப் புறக்கணிப்பு காரணமாக இன்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கடமை நிறைவேற்று அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த பொ.வாகீசன் ஆகிய இரு அதிகாரிகள் மாத்திரமே கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 50 லீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவர் கைது!

## 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பொலிஸாரால் 250 லீற்றர் கோடா மற்றும் 15 லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று மாலை அச்சுவேலி – வாகையடி பகுதியிலுள்ள வீடொன்றினுள் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அச்சுவேலி உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரியும் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியுமான பொலிஸ் பரிசோதகர் பாலசூரிய தலைமையிலான பொலிஸ் கொஸ்தாபிள்களான ஆனந்தராஜ், இந்திக்க, விதுஷன், சமக்தா ஆகியோரின் சுற்றிவளைப்பில் மேற்படி கசிப்பு உற்பத்தி நிலையம் முற்று கையிடப்பட்டது.



இதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் அடுப்பு, காஸ் சிலிண்டர், கொள்கலன்கள் உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் சந்தேகிக்கப்படும் வாகையடி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை மேலதிக விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வாய்க்காலில் வீழ்ந்த வான்

(எம்.எம்.நௌபீக்)

தோப்பூர், பாலத்தோப்பூர் சந்தியில் உள்ள பிரதான வாய்க்காலில் இன்று காலை வான் ஒன்று வீழ்ந்தது.

தோப்பூரிலிருந்து மூதூர் நோக்கிப் பயணித்த வான் இயந்திரக் கோளாறு காரணமாக பிரதான வாய்க்காலில் வீழ்ந்தது. எனினும், அந்த வானில் பயணித்த சாரதி எவ்வித காயமும் இன்றி உயிர்பிழைத்தார்.

இவ்வாறான விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்கு வாய்க்கால் ஓரங்களில் தடுப்பு வேலி அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**பல்கலைக்கழக...**

திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாக பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச்சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம் உங்களுக்குப் பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக் கழகங்கள் இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

– என்றுள்ளது.

இதேவேளை, தங்களுடைய கோரிக்கைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை தாம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும், இனிவரும் காலங்களில் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தவுள்ளதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நேற்றிரவு அறிவித்திருந்தது. எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் பணிப்புரை பற்றி ஆராய்வதற்காக அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் பிரதிநிதிகள் இன்றிரவு நிகழ்நிலையில் கூடவிருக்கின்றனர்.



# கோரக்கர் பிள்ளைர் கோயிலுக்கு லண்டனிலிருந்து ஒலிபெருக்கி!

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்க பிள்ளையார், ஸ்ரீஅகோர மாரியம்மன் ஆலயங்களுக்கான ஒலிபெருக்கி மற்றும் துணைச் சாதனங்களுக்கான உதவி லண்டனில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆலய பொருளாளர் கிருஷ்ண பிள்ளை சசிகரன் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இந்தச் சாதனங்களை லண்டனில் வசிக்கும் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளை அமைப்பின் ஸ்தாபகர் பத்மநாதன் நடேசன் வழங்கி வைத்தார்.

அவர் அமரத்துவமடைந்ததனது தாயாராகிய பத்மநாதன் மகேஸ்வரி யின் 12 ஆம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு இவற்றை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வு சம்மாந்துறை ஸ்ரீ கோரக்க பிள்ளையார் ஆலயத்தில் நேற்று (29) புதன்கிழமை மாலை நடைபெற்றது.

ஒலிபெருக்கி மற்றும் துணைச் சாதனங்களை நடேசன் சார்பில் ரவிந்திரன் கபிலாசன், உதயகுமார் ஸயிப்பிரசாந் ஆகியோர், உதவிக் கல்விப் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான வி. ரி.சகாதேவராஜா முன்னிலையில் வழங்கினர்.

ஆலயம் சார்பில் பிரதம குரு சிவஸ்ரீ சுவேந்திரன் குருக்கள் மற்றும் செயலாளர் த.அழகுதுரை, பொருளாளர் கி.சசிகரன் ஆகியோர் அதனைக் கையேற்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஊசலாடும் உயர் கல்வி

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும், நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி, உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனை சாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுக்கப்படிருக்கின்றது.

பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை பணிப் பகிஷ்கரிப்புக் காரணமாக நாட்டில் உள்ள அரச சம்பந்தமான அனைத்து உயர் கல்விக் கூடங்களும் சுமார் ஒரு மாத காலமாக செயலிழந்திருக்கின்றன. இந்தப் பின்புலத்திலேயே இந்த அழைப்பு பணிப்புரை வடிவத்தில் வந்திருக்கின்றது.

வழமையாகவே பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் கல்லூரி படிப்புக்கு அப்பால் உயர் கல்வி போதனைக் காலம் முழுவதும் பெரும் தாமதமான ஒரு செயல்பாடாகவே வெளிப்படுகின்றது. கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருக்கும் நேரம், பல்கலைக்கழகங்களில் போதனைத் திட்டங்கள் முடிவுறுவதற்கான கால இழுபறி போன்றவை இளம் கல்விச் சமூகத்தின் வளம் மிக்க பருவ காலத்தை அவமே விழுங்கும் பேரிழப்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்தோடு கொவிட் கால கல்வி இழப்பும் சேர, பெரும் பின்னடைவு நிலையை - காலதாமதத்தை - நமது தற்போதைய இளம் சமூகம் எதிர்கொண்டுள்ளது.

கொவிட் தொற்றுக் காரணமாக இழந்த கல்வி நாள்களை ஈடு செய்வதற்காக நமது பாடசாலை கல்வித்துறை நடத்தும் பகீரதப் பிரயத்தனப் போராட்டம் தெரிந்ததுதான். இன்னுமே ஜி.சி. ஈ. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை வழமை நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. அதற்காக தவணை நேர அட்டவணைகளை இறுக்கி, ஒரு ஒரு வருடத்துக்குள் ஒன்றரை வருடத்திற்கு அதிகமான கல்விப் போதனை மற்றும் பரீட்சைகளை நடத்தி முடித்து, நிலைமைகளை சுமுகமாக்கப் பாடசாலைக் கல்வித்துறை அல்லாடுகிறது.

அதன் தொடர் பாதிப்புகள், விளைவுகள் பல்கலைக்கழக கல்விக்குள்ளும் நீண்டு செல்வது கண்கூடு.

அப்படி இருக்க, கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை என்ற பெயரில் சுமார் ஒரு மாதத்திற்கு மேல் பல்கலைக்கழகங்கள் செயலிழந்திருக்கின்றமை நாட்டின் கல்வித் துறைக்குப் பெரும் இழுக்கு. சாபக்கேடு.

நாட்டின் பெருவளத்தையும், நிதியையும், கல்விப் புலமையாளர்களின் அரும் பங்களிப்பையும், அர்ப்பணிப்பையும் ஒருங்கிணைத்துக் கட்டி வளர்க்கப்பட்ட நாட்டின் உயர் கல்வித்துறை, இன்று தனியார் கல்விக் கட்டமைப்புகளின் முன்னால் கேவலப்பட்டு போகும் நிலையை இத்தகைய கல்விச் செயலிழப்புகள் உருவாக்கி விடும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் திடுதிப்பென இந்த் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கி விடவில்லை. நீண்ட காலமாக, பல வடிவங்களில் அவர்கள் எடுத்துரைத்து வந்த அவர்களின் பிரச்சினைகள், அவர்கள் பக்க நியாயங்கள் செவிமடுக்கப்படவோ கவனத்தில் கொள்ளப்படவோ இல்லாத நிலையில் - சூழலில் - நீண்ட, தகுந்த முன்னறிவிப்புக்கள், எச்சரிக்கைகளின் பின்னர்தான, வேறு வழியின்றி, இந்த நடவடிக்கைக்குள் இறங்க அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

சுமார் ஒரு மாத கால விடாத போராட்டத்தின் பின்னர் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் பிரச்சினைகள் மட்டுமல்லாமல், அரசாங்க ஊழியர்கள் அனைவரினதும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கான நிபுணர் குழு ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை இப்போது பரிந்துரைத்திருக்கின்றது.

இந்தப் போக்குக் கூட 'வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்கும்' திட்டம் மாதிரி, காலத்தை இழுத்தடித்து, காதில் பூச்சுற்றிச் சமாளிக்கும் எத்தனம் போலவே தோன்றுகின்றது.

நாட்டில் அல்லாடும் உயர் கல்வித் துறையை ஒருபுறமும், தமது போராட்ட நியாயங்களை மறுபுறமும் வைத்துக் கொண்டு, நிபுணர் குழு என்ற பெயரில் காதில் பூச்சூற்றுவதற்கு அமைச்சரவை எடுத்திருக்கும் இந்த முடிவு குறித்து ஒரு தீர்க்கமான தீர்மானத்தை - முடிவை - எடுக்க வேண்டியவர்களாக பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளனர்.



# ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த மாநாடு!

(பழுவூரான்)

ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் 55 ஆவது வருடாந்த மாநாடு ஆரையம்பதி நந்தகோபன் மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (29) இடம் பெற்றது.

ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத் தலைவர் மு.கோமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

இதன்போது மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் 345 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் இருந்து வாக்கெடுப்பு மூலம் ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சுபியானின் மேற்பார்வையில் இடம் பெற்றது.

இந்த வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டவர்கள் இரு வருடத்துக்குத் தமது சேவையை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்றுச் சென்ற கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு வாழ்த்துப்பா, நினைவுச் சின்னம் வழங்கப்பட்டன. பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மண்முனைப் பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி ரீ.தட்சணகௌரி, மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி சத்தியாணந்தி நமசிவாயம், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயாரிதர், ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் திருமதி நிகாரா மஃவஜுத், பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.







# இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் விஷேட வேலைத்திட்டம் நடைமுறை



(எம்.ஏ.றமீஸ்)

சிலோன் ஊடகவியலாளர் போரத்தால், மாவட்டங்களுக்கு இடையிலான இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் விஷேட வேலைத்திட்டம் அண்மையில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் இடம்பெற்ற இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தில் அங்கத்துவம் பெறும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் குடும்ப அங்கத்தவர்கள் எனப் பலர் இதன்போது கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இந்த ஊடக அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் இந்த வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்தரப்பட்ட மக்களை நேரில் சந்தித்து இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்தை மேற்கொண்டனர்.

காத்தான்குடி அல்-அக்ஷா ஜும்ஆ பள்ளிவாசல், காத்தான்குடி மீரா ஜும்ஆ மஸ்ஜித் உள்ளிட்ட மத ஸ்தானங்களை தரிசித்து அவற்றின் வரலாறுகள் மற்றும் தடயங்கள் தொடர்பில் அறிந்து கொண்டனர்.

இறந்த ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், துறைசார் முக்கியஸ்தர்களின் ஈடேற்றத்துக்காகவும், இன ஐக்கியத்துக்காகவும் இதன்போது விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.





# சந்நிதி - கதிர்காம பாதயாத்திரை கோபாலபுரத்தில் பெரும் வரவேற்பு

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப் பாணம் சந்நிதி – கதிர்காம ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத் திரை குழுவினருக்கு திருகோணமலை கோபாலபுரத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோபாலபுரம் தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மகத்தான வரவேற்பை வழங்கினர்.

கோபாலபுரத்தை சேர்ந்த சுவிட் சர்லாந்தில் வாழும் ஆசிரியை திருமதி விஜயகுமாரி மகேஸ்வரன் அனுசரணை வழங்கினார்.

நேற்று நிலாவெளியில் தங்கிய அவர்கள் இன்று (30) திருகோண மலையை அடைந்தனர்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சன்னிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை இன்று 20 ஆவது தினம் நடைப் பயணத்தைத் தொடர்ந்துள்ளது.

கதிர்காம பாதயாத்திரை பேரவை யின் தலைவர் ஜெயாவேல்சாமி தலை மையில் இந்த குழுவினர் யாத்திரை யில் ஈடுபட்டுள்ளனர்.

மொத்தமாக 89 அடியார்கள் இந்த பாதயாத்திரை குழுவில் இடம் பெற்றுள்ளனர்.









# கடற்கொந்தளிப்புக் காரணமாக மீன்களின் விலைகள் அதிகரிப்பு





**(பாறுக் ஷிஹான்)**

ரிமால் புயல் காரணமாக கடற்பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆழ்கடல் வள்ளங்கள் எவையும் மீன்பிடிக்க செல்லவில்லை. இருந்த போதிலும் கரை வலை மீன் வள்ளங்கள் மீன் பிடி நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு , பெரியநீலாவணை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், பகுதிகளில் உள்ள மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்கள் புயல் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளது. ஒரு சில சந்தைகளும் மீன்கள் இன்மையால் மூடி காணப்படுகின்றன. பெரிய நீலாவணை முதல் பொத்துவில் பகுதி வரையுள்ள கடற்பரப்பு உள்ளிட்ட கடற்பிராந்தியத்தில் மீன்களின் பிடிபாடு பெருமளவில் குறைவடைந்துள்ளது.

இதற்குக் காரணம் சடுதியாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் நிலவு வெளிச்சம் போன்ற காரணத்தால் மீன்களின் பிடிபாடு வெகுவாகக் குறைவடைந்துள்ளது என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ விளைமீன் 1600 ரூபாவாகவும் பாரை மீன் ஒரு கிலோ 2400 ரூபாவாகவும் இறால் ஒரு கிலோ 1800 ரூபாவாகவும் கணவாய் ஒரு கிலோ 1700 ரூபாவாகவும் சூடை மீன் ஒரு கிலோ 1000 ரூபாவாகவும் சுறா மீன் ஒரு கிலோ 2500 ரூபாயாகவும் வளையா மீன் 1500 ரூபாவாகவும் நண்டு ஒரு கிலோ 1600 ரூபாவாகவும் தற்போது மீனவர்களால் கடற்பரப்புக்களை அண்டிய பகுதிகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதர சில்லறை மீன் வகைகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.





# ‘ஆதிகால யாழ்ப்பாணம்’ நூல் வெளியீடு

பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய ‘ஆதிகால யாழ்ப்பாணம்’ நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (26) கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தலைவர் கலாநிதி க. இரகுபரன் முன்னிலையில், ஜனாதிபதி சட்டத்தரணி க. கனக ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சட்டத்தரணி நடராஜார் காண்டீபன், பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், பேராசிரியர் வ. மகேஸ்வரன் கலாநிதி க.இரகுபரன் ஆகியோர் உரையாற்றினர்.

முதல் பிரதி, சிறப்புப்பரதி, கௌரவ பிரதிகளை, ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன், உப தலைவர் அரியரத்தினம், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோருக்கு நூலாசிரியர் பேராசிரியர் சி. பத்மநாதன் வழங்கிவைத்தார்.







# சாய்ந்தருது பிரதேசத்தில் தெருவிளக்குகள் வழங்கல்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச மக்கள் சாய்ந்தமருது ஒஸ்மன் வீதி, ஓராபிபாஷா வீதி, மார்க்கட் வீதிகளுக்கு தெருவிளக்குகள் இல்லாத காரணத்தால் அந்த வீதிகளுக்கு தெரு விளக்குகளை வழங்கி வைக்குமாறு பிரதேச மக்கள் ரிஸ்லி முஸ்தபாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் வீதிகளுக்கு பொருத்துவதற்கான மின் விளக்குகளை ரிஸ்லி முஸ்தபா நேற்று (29) வழங்கினார்.

மின் விளக்குகள் இல்லாத காரணத்தால் இரவு வேளைகளில் நாய்களின் தொல்லையும், கள்ளர்களின் நடமாட்டமும் அதிகரித்து காணப்பட்டது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் பயணித்தனர். தற்போது இந்த உதவிக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.



# புத்தளம் தள வைத்தியசாலையை தரமுயர்த்தல் தொடர்பில் ஆராய்வு



**(ரஸீன் ரஸ்மின்)**

வடமேல் மாகாண சபையின் கீழ் உள்ள புத்தளம் தள வைத்தியசாலையை தரமுயர்த்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அங்கு நீண்ட காலமாக நிலவிவரும் குறைபாடுகள் தொடர்பில் ஆராயும் விஷேட கலந்துரையாடல் நேற்று (29) வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம், சிந்தக அமல் மாயாதுன்ன, வடமேல் மாகாண முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பரீத், வைத்தியர் முஹம்மது ஜௌசி, புத்தளம் தள வைத்தியசாலை அபிவிருத்தி குழு உப தலைவர் எஸ்.சந்திரதாச, செயலாளர் - ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் எச்.எம்.எம்.சபீக், பொருளாளர் - பொது சுகாதார பரிசோதகர் முகம்மது அபுஷாலிப் மற்றும் வைத்தியர் எம்.ஸ்ரீதரன் உட்பட மதத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வைத்தியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் புத்தளம் தள வைத்தியசாலை குறைபாடுகள் தொடர்பில் ஆளுநர் நசீர் அஹ்மட்டுக்குத் தெளிவுபடுத்தினார்கள்.

கற்பிட்டி, முந்தல், வன்னாத்தவில்லு, புத்தளம் மற்றும் கருவலகஸ்வெவ உள்ளிட்ட பல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் ஆயிரக் கணக்கான மூவின மக்களும் தமது மருத்துவ தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் புத்தளம் தள வைத்தியசாலைக்கே வருகை தருவதாக இதன்போது ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், புத்தளம் நகரை அண்டிய பகுதியில் பொலிஸ் உட்பட முப்படையினரின் முகாம்களும் இருப்பதாகவும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சிறந்த சேவைகளை வழங்குவதற்கான போதுமான வசதிகள் இன்மையால் வைத்தியசாலை நிர்வாகம் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

அபிவிருத்தி உள்ளிட்ட தேவைகளுக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாகாண சபையால் வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வழங்கப்படும் நிதியை அதிகரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அல்லது புத்தளம் தள வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் புத்தளம் தள வைத்தியசாலையில் நோயாளிகள் மாத்திரமன்றி, வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் பயிற்சி வைத்தியர்களும், ஊழியர்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

வடமேல் மாகாணத்துக்குப் புதிதாக நியமனம் பெற்றுள்ள தாங்கள், புத்தளம் தள வைத்தியசாலைக்கு அதிகாரிகளுடன் கள விஜயம் செய்து அங்கு காணப்படும் குறைபாடுகளை ஆராயுமாறும் அந்த குழுவினர் ஆளுநரை வேண்டிக்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் முன்வைத்த பிரச்சினைகளை மாகாண ஆளுநர் நசீர் அஹ்மட் செவிமெடுத்தார்.

இதன்போது, மாகாணத்தின் சுகாதார தேவைக்காக மத்திய அரசினால் மாகாண சபைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி குறைவாக இருக்கிறது. கிடைக்கும் நிதியை மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் வழங்க வேண்டும் எனக் கூறினார்.

கிடைக்கின்ற சொற்ப நிதியைக் கொண்டு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் பிரித்துக்கொடுப்பது என்பது எமக்கு பெரும் சவாலாக உள்ளது. எனவேதான் மத்திய அரசால் வழங்கப்படுபோன்ற நிதியை அதிகரித்துக் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன் எனவும் கூறினார்.

அத்துடன், எமது கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியசாலையை விடுவிப்பது என்பது மாகாணத்துக்கு நஷ்டமாகும். எம்மால் நிர்வாகிக்க முடியாவிட்டால் மாத்திரமே நாம் மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, மத்திய அரசினால் நிதி அதிகரித்துக் கொடுக்கப்படும் பட்சத்தில் புத்தளம் தள வைத்தியசாலையின் அபிவிருத்தி உட்பட அங்கு காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.- என்றார்.

அடுத்த மாதம் 12 ஆம் திகதி புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. அந்த கூட்டம் முடிவடைந்த பின்னர் புத்தளம் தள வைத்தியசாலைக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என்றும் ஆளுநர் வாக்குறுதியளித்தார்.

இதேவேளை, புத்தளம் தள வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் முழுமையான அறிக்கை ஒன்றை வழங்குமாறும் புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.





# பாரம்பரிய உணவுக் காட்சியும் விற்பனையும் மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்கள் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய பாரம்பரிய உணவுக் கண்காட்சியும் விற்பனையும் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை (29) இடம்பெற்றன.

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வீ.வாசுதேவனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவின் மேலதிக செயலாளர் சந்தன திலகரெட்ண, சுதேச வைத்திய அமைச்சின் பணிப்பாளர் பி. தயானந்தன், மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் ஜெயலட்சுமி பாஸ்கரன், சித்த ஆயுள்வேத பொரளை வைத்தியசாலை தொழில் நுட்ப பிரிவு மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் கிஷோர் லோஷன் மற்றும் வைத்தியர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் இலவச மருத்துவ முகாம், ஆயுள்வேத உற்பத்திகள், பாரம்பரிய உணவுக் கண்காட்சி மற்றும் விற்பனையும் என்பன இடம் பெற்றன.

சுதேச வைத்திய அமைச்சின் நிதி அனுசரணையுடன் பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் ஆகியோரின் வழிகாட்டலுடன் பிரதேச செயலக சுதேச வைத்திய உத்தியோகத்தர்களான ரி.வேணுகா, எம். ஜெயபால் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலின் கீழ்இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து சித்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபையால் வலுவூட்டல் மற்றும் விழிப்புணர்வு சம்பந்தமான செயலமர்வு நடத்தப்பட்டது.

இதன்போது பாரம்பரிய வைத்தியர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.



# மட்டு. மாணவர்களின் முன்மாதிரி பாடசாலைத் தோட்டத்தில் அறுவடை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலய பாடசாலைத் தோட்டத்தில் விளைந்த மரக்கறிகள் அறுவடை செய்யப்பட்டுள்ளன.

“பயிர் வளர்ப்போம் பலன் பெறுவோம்” எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களிடையே வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் பாடசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைத் தோட்டச் செய்கை வெற்றியளித்துள்ளது.

கத்தரி, புடோல், பாகற்காய், பயற்றங்காய், மரவள்ளி பயிர்களில் முதல் அறுவடை நிகழ்வு நேற்று (29) பாடசாலை முதல்வர் வே. குணாளன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## ஈழத்தில் நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

# கிழக்கின் குரல் நடேசனின் தமிழ் ஊடக சேவை...!

**(சமூக விடுதலைக்கான கிழக்கின் குரலாய் விளங்கிய ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன், 2004 மே 31 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அவரது 20 ஆம் ஆண்டு நினைவு தினம் நாளை. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக, நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாளே 2004 மே 31 ஆம் திகதி. நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள்.

### சமூக விடுதலைக்கான குரல்

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்தக் கொலை நடந்த, அடுத்த ஞாயிறு பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகியிருந்தது. மிகக் காரசாரமானதும் துணிச்சலோடு பல விடயங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது.

இந்த நிலையில் 2004 மே மாதம் 31 ஆம் திகதி காலை, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் தனது அலுவலகத்துக்குச் செல்லும் வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன்.

“நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படுவதையே விரும்புகின்றேன்” என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.

### மட்டக்களப்பின் ஊடகத்துறை நடேசனுடன் மரணித்ததா?

நடேசனின் மரணத்துடன் மட்டக்களப்பின் ஊடகத்துறை மரணித்து விட்டதா? என்று நடேசனின் 13 ஆவது நினைவு தினத்தில் கேட்கப்பட்டது. மிகக் கடுமையான யுத்த காலத்தில் பல்வேறு வகையான அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றிய ஊடகவியலாளர் நடேசன் போன்றோர் வாழ்ந்த மட்டக்களப்பு மண்ணில் இன்றைய ஊடகத்துறையின் செயற்பாடுகள் கவலை கொள்ளத்தக்க வகையில் உள்ளன.



ஊடக சுதந்திரம் மீள உறுதிப்படுத்தப்பட்டுள்

தொடர்ச்சி▼

# கிழக்கின் குரல் நடேசனின் தமிழ் ஊடக சேவை...!

தொடர்ச்சி▲

எது என்று சொல்லும் இன்றைய காலத்தில் ஊடகவிய லாளர்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சம்மந்தமாக எழுதுவதற்கு பினனடிப்பதுடன் அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்யும் ஊழல்கள் அநீதிகள் குறித்து எழுதுவதற்கு பயப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது.



இவ்வாறான நிலையில் ஊடகவியலாளர் நடேசனின் தியாகமும் ஊடகத்துறை ஊடாக தமி ழர்களின் விடுதலைக்காக ஆற்றிய அளப் பெரிய சேவையும் நடேசனின் நினைவு தினத்தில் மட்டக்களப்பில் நினைவு கூறப்பட்டன.

## ஈழத்தில் சுயாதீன ஊடக அடக்குமுறை

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்கு வதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூரத் தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன.

1981 இல் ஈழநாடு எரிப்பு முதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறை களையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவிய லாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக் கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாகக் கருத் துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம், சுப் பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவ குமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்க வென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகை யாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவிய லாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

## அச்சுறுத்தல் மிகுந்த பணி

ஐ. நடேசனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர் வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்துவந்தார்.

கிழக்கில் அனைவரையும் அவருக்குத் தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும்.

நடேசனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகத்தான் இருந்தது. அந்தக் காலத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந் தன.

## சிங்கள ஊடகர் படுகொலை

ஸ்ரீலங்காவில் 1990 ஆம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறை படிந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு நிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண் டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம். தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியரான இருந்தவர். 28 ஏப்ரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதி கரித்து வந்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

## நிமலராஜன் படுகொலை

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப் பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

ஈழப் போரின் மையப் புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்தில் இருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

தொடர்ச்சி▼

# கிழக்கின் குரல் நடேசனின் தமிழ் ஊடக சேவை...!

தொடர்ச்சி▲

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

### தலைநகரில் சிவராம் கொலை

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாய மற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கர வாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத் தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படு வதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நில வும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங் களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில விளக்கினார்.

சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டு மன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக் கையும் மாற்றியமைத்தது.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரை களுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவிய லாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க் கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத் துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போது களில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காகச் சிங்கள ஊடக வியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில்முறை உறவை வளர்த்துக் கொள்ளச் சிவராம் தவறவில்லை.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக் களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது 'இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்' என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்ரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

### உதயன் மீதான தாக்குதல்

2006 இல் திருகோணமலையில் ஆறு மாணவர்களின் கொலையை வெளிப்படுத்தி யதற்காக உதயன், சுடர் ஒளி நிருபர் சுப்பிரணியம் சுஜிதராஜ் கொல்லப்பட்டார்.

2006 ஆம் ஆண்டு ஈழத்தின் மிகப்பெரும் ஊடகப் படுகொலை என்று வர்ணிக்கப்படு கின்ற உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு பணியில் இருந்த இரு வரை சுட்டக் கொன்றார்கள். இது ஊடக நிறு வனத்தக்குள் புகுந்து நடத்தப்பட்ட மிகப்பெரியதும் முக்கியமானதுமான தாக்குதலாகும்.

இதில் தாக்குதலை நடத்தியவர்கள் இலகுவாக கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புக்கள் இருந்த போதும் அது தொடர்பாக எவரொருவரும் கைது செய்யப்பட்வில்லை விசாரிக்கப்படவில்லை. இந்தக் காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டதான பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

### வன்னியின் குரல் சத்தியமூர்த்தி

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணிய மூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்ற நிலையில் இறந்தார்.

ஊடகத்துறையில் 1990 களில் ஈடுபடத் தொடங் கிய இவர், “வெளிச்சம்” சஞ்சிகை உள்ளிட்ட அச்சு ஊடகங்களில் கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்தார். 1990-களின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் படைத்துறை ஊடகப்பணியில் ஈடுபட் டார். ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்த இவர், ஈழநாடு பத்திரிகையில் ஊடகவிய லாளராக செயற்பட்டு அரசியல் படைத்துறை ஆய்வுக ளையும் எழுதி வந்தார்.

2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளைப் புலம்பெயர் ஊடகங்களுக்குத் தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

### ஈழத்தில் நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக் காக செயல்படும் 'கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்ன லிஸ்ட்ஸ்' என்ற அமைப்பு இலங்கையில் 1992 ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு காலம்வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட் டனர் என்று தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39 இற்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

நிமலராஜனின் மரணத்துக்குப் பிறகு வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39 இற்கும் மேற்பட்ட ஊடகப் பணியாளர்கள் அல்லது ஊடக வியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடகப் பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத்தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக் கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மை யாகும்.



# உலகத்தன்மம் சமூக அமைப்பால் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு!

(பழுவூரான்)

உலகத்தன்மம் சமூக அமைப்பின் மூலமாக பழமரங்கள் மற்றும் பயிர்க் கன்றுகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட திருப்பெருந்துறை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் நேற்று புதன்கிழமை (29) இடம்பெற்றது.

இதன்போது மாணவர்களின் வெளிக்கள ஈடுபாடு, உணவு உற்பத்திச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு பழமரக் கன்றுகள், பயிர்க் கன்றுகள் வழங்கப்பட்டன. பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மரங்கள் நடப்பட்டன.



அத்தோடு பாடசாலை வளாகத்தில் உள்ள சிறுவர் பூங்கா பகுதியானது சிரமதானம் மூலம் துப்பரவு செய்யபட்டது.

இந்தப் பணியை திட்டமிட்ட வகையில் செய்து முடிப்பதற்கு அனுமதி வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பணியில் கைகோர்த்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், விசேடமாக பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்து பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க உதவிய அமைப்பின் உறுப்பினர்கள், ஆலோசனை, வழிகாட்டல்களை வழங்கிய எமது அமைப்பின் ஸ்தாபர் பயஸ் இராஜேந்திரனுக்கும் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் உலகத்தன்மம் சமூக அமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

# புகைத்தல், மது எதிர்ப்பு தின நிகழ்வுகள் அம்பாறையில்

(எம். எப். நவாஸ் )

நாடு முழுவதும் சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தின நிகழ்வுகள் நாளை (31) ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலிலும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன் பிரதான நிகழ்வு அம்பாறையில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் அகமது ஷாபிர் தலைமையில் விமர்சையாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொள்வர்.

இவ்வாண்டுக்கான (2024) சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தொணிப் பொருளாக, 'நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பே-ாம்', "வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டி எழுப்புவோம்' என்பன உள்ளன.

இதனையொட்டி மரதன் ஓட்டப் போட்டி, புகைத்தல் எதிர்ப்புக் கொடி விற்பனை, வீதி நாடகங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் வீரருக்கு 15000 ரூபாவும் இரண்டாம் இடத்தை பெறுகின்ற வீரருக்கு 10000 ரூபாவும் மூன்றாம் இடத்தை பெறுகின்ற வீரருக்கு 7500 ரூபாவும் நான்கு மற்றும் ஐந்தாம் இடங்களை பெறுகின்ற வீரருக்கு தலா 5000 ரூபாய் வீதமும் வழங்கப்பட உள்ளது. கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப் பட உள்ளனர் என்று அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அகமது ஷாபிர் தெரிவித்தார்.



# தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட மாநாடு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட ஓய்வு பெற்ற முப்படை வீரர்களின் மாநாடு நேற்று (29) அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் பங்கேற்றனர்.

# கிரிக்கெட் சவால் கிண்ணத்தை சுவீகரித்தது மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கோட்டமுனை விளையாட்டுக் கழகம் மற்றும் மட்டக்களப்பு பாடசாலை கிரிக்கெட் அபிவிருத்தி அதிகார சபை என்பன ஒன்றிணைந்து நடாத்திய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சவால் கிண்ணத்தை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி சுவீகரித்துக்கொண்டது.

இப்போட்டி மட்டக்களப்பு கோட்டைமுனைக் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை அணி, 18.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

இதன்படி மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அணி 99 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.




இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்லடி 243 ஆவது காலால்படையின் அதிகாரி பிரிகேடியர் சந்திம குமாரசிங்க மற்றும் கல்லடி 243ஆவது காலால்படை அதிகாரி லெப்டினன்ட் கேணல் தம்மிக வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கன்னியாகுமரியில் மோடியின் தியானம் தேர்தல் விதிமுறைகளை மீறுவது அல்ல

## மாவட்டத் தேர்தல் அதிகாரி விளக்கம்



**குமரி, மே 30**

பிரதமர் மோடியின் கன்னியாகுமரி வருகையும் அங்கு அவர் மேற்கொள்ளும் தியான நடவடிக்கையும் தேர்தல் விதிமீறல் என்ற குற்றச்சாட்டை மாவட்டத் தேர்தல் அதிகாரி நிராகரித்து விட்டார்.

நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் இறுதிக்கட்டமான 7ஆவது கட்டத் தேர்தல் நாளை மறுதினம் முதலாம் திகதி நடைபெறுகிறது. 4 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாக இருக்கின்றன. நாடாளுமன்ற தேர்தல் முடிவடையும் நேரத்தில் பிரதமர் மோடி, ஆன்மிகத் தலங்களுக்கு சென்று தியானம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அதேபோல நாடாளுமன்ற தேர்தல் நிறைவடையும் நிலையில் பிரதமர் மோடி கன்னியாகுமரியில் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்தை, தியானம் செய்வதற்கு ஏற்ற இடமாக தேர்வு செய்துள்ளார். இதற்காக பிரதமர் மோடி இன்று (வியாழக்கிழமை) மாலை 4.35 மணிக்கு கன்னியாகுமரிக்கு வருகிறார்.

பின்னர் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு செல்கிறார். அங்கு விவேகானந்தர் சிலைக்கு மரியாதை செலுத்திவிட்டு தியான மண்டபத்துக்கு சென்று மாலை 6 மணி அளவில் தியானத்தை தொடங்குகிறார். 3 நாள்கள் அங்கேயே தங்கியிருந்து தியானம் செய்ய உள்ளார். இதற்காக விவேகானந்தர் மண்டபத்தில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் மோடி 3 நாள்கள் தியானம் மேற்கொள்வது அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்பையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. பிரதமரின் தியானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், தி.மு.க. தேர்தல் ஆணையகத்தில் புகார் தெரிவித்துள்ளன. மேலும் பிரதமரின் தியான நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கக்கூடாது என கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் தி.மு.க. சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதமர் மோடி வருகை குறித்து கன்னியாகுமரி மாவட்ட கலெக்டரும், தேர்தல் அதிகாரியுமான ஸ்ரீதர் விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறுகையில், "பிரதமர் வருவது தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டது அல்ல. பிரதமரின் வருகையும், தியானமும் தனிப்பட்ட நிகழ்வு என்பதால் அனுமதி கோரப்படவில்லை. தனியார் பராமரிப்பில் உள்ள இடத்திற்கு தனிப்பட்ட நிகழ்விற்கு வருவதற்கு மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெறத் தேவையில்லை. தேர்தல் விதிமுறைப்படி பரப்புரை மேற்கொண்டாலோ அல்லது கூட்டம் கூட்டினாலோ நடவடிக்கை எடுக்கலாம்." என விளக்கமளித்தார்.

# கண்ணியமான பேச்சுகளை பேசாத முதல் பிரதமர் மோடி

## முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காட்டம்



"இதுவரை எந்தப் பிரதமரும் தரம் தாழ்ந்த பேச்சைப் பேசவில்லை. வெறுப்புப் பேச்சைப் பேசிய முதல் பிரதமர் மோடிதான்" என முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஜனநாயகத் தேர்தல் பெருவிழாவின் கடைசிகட்ட வாக்குப்பதிவு நாளை மறுதினம் ஜூன் முதலாம் திகதி நடைபெற இருக்கிறது. இந்த நாளில்தான் பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது.

அதுபோல் பஞ்சாப்பில் மொத்தம் உள்ள 13 மக்களவைத் தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது. இதனால், கட்சித் தலைவர்கள் கடைசிக்கட்ட பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பஞ்சாப் வாக்காளர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், "பிரதமர் பதவிக்குரிய மாண்பை சீர்குலைத்துவிட்டார் மோடி. பிரசாரம் முழுவதும் அவர் வெறுப்புப் பேச்சைப் பேசி வருகிறார். குறிப்பிட்ட சமுதாயத்தினரைத் தரம் தாழ்ந்து விமர்சிக்கிறார். அவரின் பிரசாரம் மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் உள்ளது. இதற்குமுன் எந்தப் பிரதமரும் இப்படி வெறுப்புப் பேச்சையோ, கீழ்த்தரமான வார்த்தைகளையோ பயன்படுத்தவில்லை. பொதுப் பரப்புரையில் கண்ணியமான பேச்சுகளைப் பேசாத முதல் பிரதமர் மோடிஜி" எனத் தெரிவித்துள்ளார்.



# ஒரே நாளில் 400 உக்ரைன் வீரர்கள் சாவு என்கின்றது ரஷ்ய இராணுவ அமைச்சகம்

**மொஸ்கோ, மே 30**

உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய நகரங்களை குறிவைத்து ரஷ்ய இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் அந்த யுத்தமுனையில் ஒரே நாளில் 400 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டனர் ரஷ்ய இராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது.

நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் இணைய முயற்சித்த உக்ரைன் மீது ரஷியா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில் இருதரப்பிலும் எண்ணற்ற உயிர்கள் பறிபோயுள்ளன. இருந்தபோதிலும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லாமல் தொடர்ந்து வருகிறது.

இந்தநிலையில் உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய நகரங்களை குறிவைத்து ரஷ்ய இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தினர். ஏவுகணைகளை வீசியும், கவச வாகனங்களைக் கொண்டு இந்த பயங்கர தாக்குதலில் ரஷ்ய வீரர்கள் ஈடுபட்டனர். ரஷ்யாவின் இந்த சரமாரி தாக்குதலை சமாளிக்க முடியாமல் உக்ரைன் வீரர்கள் நாலாபுறமும் சிதறி அடித்து ஓட்டம் பிடித்தனர் என ரஷ்யா கூறுகிறது.

இந்தநிலையில் இந்த போரில் ஒரே நாளில் 400 உக்ரைன் வீரர்கள் கொல்லப்பட்டனர் என ரஷ்ய இராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது. உக்ரைன்ஈராணுவத்துக்குச் சொந்தமான 2 டாங்கிகள், 11 கவச வாகனங்கள் ஆகியவற்றையும் தாக்கி அழித்த தாகவம் அது தெரிவித்துள்ளது.

# இராட்சத பலூன்களின் மூலம் குப்பைகளை தென் கொரியாவில் கொட்டும் வடகொரியா

**சியோல், மே 30**

இராட்சத பலூன்கள் மூலம் தென் கொரியாவில் குப்பைகளை வட கொரியா கொட்டியது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா அடிக்கடி ஏவுகணைச் சோதனை நடத்தி தென்கொரியாவை அச்சுறுத்தி வருகிறது. தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து போர் ஒத்திகை மேற்கொள்ளும்போது, இவ்வாறு ஏவுகணைகளைச் செலுத்தி தென் கொரியாவுக்கு எச்சரிக்கை விடுத்து வருவது வழக்கம்.

தற்போதுஏராளமானஇராட்சதபலூன்களைஅது தென்கொரியா எல்லைக்குள் அனுப்பி வைத்துள்ளது. அதிலும் இரண்டு பலூன்களை ஒன்றாக இணைத்து அதில் குப்பைகளை கட்டி அனுப்பி வைத்துள்ளது. இரு நாட்டின் எல்லையில் அமைந்துள்ள தென் கொரியா பகுதிகளுக்குள் ஏராளமான பலூன்கள் இவ்வாறு பறந்து வந்துள்ளன எனத் தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த பலூன்கள் சுமந்து கொண்டு வந்த பையில் குப்பைகள்,



பிளாஸ்டிக் போத்தல்கள், பேட்டரிகள், ஷூ பகுதிகள், சாணம் போன்றவை இருந்தன என அதிகாரிகள் குற்றம்சாட்டி உள்ளனர். வடகொரியாவின் இந்தச் செயல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக தெளிவாக தெரிகிறது. மேலும், தென்கொரிய மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல் என அந்நாட்டு அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த மனிதாபிமானமற்ற மற்றும் மிகவும் தரம்தாழ்ந்த செயலை இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என கடுமையாக எச்சரிக்கிறோம் என தென் கொரியா தெரிவித்துள்ளது.

எல்லை அருகில் அமைந்துள்ள ஜியோங்கி, கங்வோன் மாகாணத்தில் உள்ள உள்ளூர் அரசு நிர்வாகிகள், அடையாளம் தெரியாத பொருள்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேலும், வெளியில் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

அந்த பொருள்கள் வீடுகள், விமான நிலையங்கள் மற்றும் சாலைகளுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியனவாக இருக்கலாம் எனவும், இரசாயன ஆயுதங்களையோ, வெடி பொருள்களையோ அந்த பலூன்கள் சுமந்து வரலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தற்போது தரையிறங்கியுள்ள பலூன்களால் சேதம் ஏதும் ஏற்பட்டது குறித்து தென்கொரியா தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை.

பக்கங்கள் 05

# கனடா முரசு

வியாழக்கிழமை 30/05/2024

## இத்தாலி, சுவிஸ்க்கு கனடா பிரதமர் விஜயம்

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இத்தாலியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜீ 7 நாடு C2




# கொவிட்டின் இரண்டு திரிவுகள் கனடாவில் வேகமாகப் பரவல்!

ஒன்ராரியோ, மே 30

புதிய கொவிட் துணை வகைகள் கனடாவில் அதிக ஆதிக்கம் செலுத்தும் நோய்வகையாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் தொற்றின் பரவல் உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி நான்கு ஆண்டுகளுக்கு மேலான நிலையில் கொவிட்டின் புதிய மாறிகள் இரண்டு கனடாவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன குறிப்பிடப்படுகின்றது.

KP.2, KP.3 என இந்தப் புதிய கொவிட் மாறிகள் - திரிவுகள் - அறியப்படுகின்றன.

இவை கொவிட் தொற்றில் இருந்து உருவான ஒரு வகை தொற்றாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த தொற்று கனடாவில் மிக வேகமாக பரவி வருவதாக சுகாதாரப் பிரிவு எச்சரித்துள்ளது.

# இந்த முறை கோடை காலம் அதிக சூரிய ஒளி, அதிக சூடு



ஒன்ராரியோ, மே 30

கோடையில் அதிக சூரிய ஒளி மற்றும் வெப்பமான வெப்பநிலையை எதிர்பார்க்கலாம் என வானிலை நெட்வொர்க் கணித்துள்ளது.

வானிலை நெட்வொர்க்கினால் புதன்கிழமை வெளியிடப்பட்ட வானிலை ஒளிபரப்பாளரின் வருடாந்த கோடை கால முன்னறிவிப்பில், கனடாவில் அடுத்த மூன்று மாதங்களில் வெப்பம் சூழ்ந்திருக்கும் என்று சுட்டிக்காட்டுகிறது.

ஜூன் மாதத்தில் ஒன்டாரியோ மற்றும் கியூபெக் குளிர்ச்சியான காலநிலையை எதிர்கொள்ளும் என்று வானிலை நெட்வொர்க் எதிர்வுகூறியுள்ளது.

‘ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் கோடை காலம் மிகவும் வலுவாக வரலாம், மேலும் செப்டம்பர் வரை நீடிக்கலாம்’ என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.







# முன்னாள் மேயரின் பெயரில் விளையாட்டு அரங்கம் திறப்பு

ஒன்ராரியோ, மே 30

டொரன்டோ நகர முன்னாள் மேயர் அமரர் றொப் ஃபோர்ட்டின் பெயரில் பெயரிடப்பட்ட விளையாட்டு அரங்கம் எட்டோபிகொக்கில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இந்த விளையாட்டு அரங்கம் முன்னாள் நகர முதல்வர் நினைவாக அதிகாரப்பூர்வமாக மறுபெயரிடப்பட்டு சென் டேனியல் பூங்காவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

றொப் ஃபோர்ட் ஸ்டேடியம் என இந்த அரங்கிற்கு பெயரிடப்பட்டுள்ளது.

முன்னாள் நகர மேயர் றொப் ஃபோர்ட்டின் 55 ஆவது பிறந்த நாளான மே 28ஆம் திகதி இந்த விளையாட்டரங்கம் திறந்து வைக்கப்பட்டது.




இந்த நிகழ்வில் ஒன்ராரியோ மாகாண முதல்வரும் றொப் ஃபோர்ட்டின் சகோதரருமான டக் ஃபோர்ட்டும், டொரன்டோ நகர மேயர் ஒலிவியா சாவ், றொப் ஃபோர்ட்டின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டொரன்டோவின் 64வது நகர மேயர் றொப் ஃபோர்ட் தமது 46 வயதில் புற்றுநோயினால் உயிரிழந்தார்.

# சமூக ஊடகத் தளங்களுக்கு எதிரான வழக்குகளில் மேலும் பாடசாலைகள்

ஒன்ராரியோ, மே 30

சமூக ஊடகத் தளங்களுக்கு எதிராக ஒன்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து பாடசாலை சபைகள் புதிதாக வழக்கு தொடர்ந்துள்ளன.

பேஸ்புக், டிக்டொக் மற்றும் ஸ்னெப் செட் உள்ளிட்ட சமூக ஊடக தளங்களுக்கு எதிராக ஒன்ராரியோவைச் சேர்ந்த ஐந்து பாடசாலை சபைகளும்,இரண்டு சுயாதீன தனியார் பாடசாலைகளும் புதிதாக வழக்குத் தொடர்ந்துள்ளன.

இது குறித்த வழக்கு முதலில் கடந்த மார்ச் மாதத்தில் ஒன்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்த நான்கு




பாடசாலை சபைகளால் ஆரம்பிக்கப் பட்டிருந்தது.

இந்த வழக்கில் புதிதாக டஃபரின்-பீல் மாவட்ட கத்தோலிக்க பாடசாலை சபை, யோர்க் மாவட்ட கத்தோலிக்க பாடசாலை சபை, டிரில்லியம் மேல லேன்ட் மாவட்ட பாடசாலை சபை, ஒட்டாவா மாவட்ட கத்தோலிக்க பாடசாலை சபை, நயாகரா மாவட்ட பாடசாலை சபை ஆகியன இணைந்துள்ளன.

அத்துடன், மிசிசாகாவில் உள்ள ஹோலி நேம் ஒப் மேரி கல்லூரி, நோர்த் யோர்க்கில் உள்ள எய்ட்ஷ் சேய்ம் பாடசாலை ஆகிய இரண்டு தனியார் பாடசாலைகளும் இந்த வழக்கில் இணைந்திருக்கின்றன.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் தலையிடுவதாகவும், கல்வி முறைக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் குற்றம் சாட்டி சமூக ஊடக தளங்களுக்கு எதிராக 4.5 பில்லியன் டொலர் இழப்பீடு கோரி இந்த வழக்குகள் பதிவாகியுள்ளன.



## இத்தாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் ட்ரூடோ பங்கேற்க உள்ளார்.

ஜனநாயகத்தின் முக்கியத்துவம், நியாயமான பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு தலையீடுகளுக்கு எதிராக போராடுதல் ஆகியன குறித்து பிரதமர் ட்ரூடோ இந்த மாநாட்டில் முக்கிய கவனம் செலுத்த உள்ளார்.

உக்ரைன் - ஹமாஸ் விவகாரம் தொடர்பில் ஏனைய நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் ட்ரூடோ பேச்சு நடத்த உள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதி ட்ரூடோ இத்தாலிக்கு விஜயம் செய்ய உள்ளார். இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து அவர் சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள உக்ரைன் சமாதான மாநாட்டிலும் பங்கேற்க உள்ளார்.



# வான்கூவரில் பல்கலை வளாகப் பகுதியிலிருந்து போராட்டக்காரர்களை வெளியேற்றிய பொலிஸ்

ஒன்ராரியோ, மே 30

வான்கூவரில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள முக்கிய வீதிச் சந்திப்பில் இருந்து பாலஸ்தீன ஆதரவு போராட்டக்காரர்களை பொலிஸார் அகற்றியுள்ளனர்.

ஆனால் ஒரு மாதமாக வளாகத்தின் விளையாட்டு மைதானத்தை ஆக்கிரமித்துள்ள போராட்ட முகாமிற்கு எதிராக வெளிப்படையான நடவடிக்கை எதுவும் இல்லை.

'யூபிசியில் காஸாவிற்கான மக்கள் பல்கலைக்கழகம்' என்ற கணக்கு முன்பு ஒரு புதுப்பிப்பை வெளியிட்டது,. சந்திப்பில் பேரணிக்கு மக்களைக் கூட்டுமாறு கேட்டுக் கொண்டது.

அடையாளம் காண விரும்பாத ஒரு எதிர்ப்பாளர் வழங்கிய காட்சிகள், சாலையில் அமர்ந்திருந்த ஒரு பெண் மீது RCMP அதிகாரிகள் ஏறி நிற்பதைக் காட்டியது.




# படைகளின் பயிற்சி, ஆயுதங்களுக்கான ஒப்பந்தங்கள் பற்றி அமைச்சர் அறிவிப்பு

ஒன்ராரியோ, மே 30

கனடாவின் மிகப்பெரிய பாதுகாப்பு தொழில் வர்த்தக கண்காட்சிக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர், ஆயுதப்படைகளுக்கான பயிற்சி மற்றும் உபகரண ஒப்பந்தங்களில் பில்லியன் கணக்கான டொலர்களை அறிவித்துள்ளார்.

ஒட்டாவாவில் நடந்த கனேடிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொழில்களின் வருடாந்த வர்த்தக கண்காட்சியான கென்செக்கில் கலந்துகொண்டு அமைச்சர் பிளேயர் உரையாற்றினார்.

அரசாங்கத்தின் புதுப்பிக்கப்பட்ட பாதுகாப்புக் கொள்கையை இதன்போது அவர் விளம்பரப்படுத்தினார்.

இது 20 ஆண்டுகளில் 73 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் கொள்முதல்களை கட்டமைக்கிறது.

இதன் அடிப்படையில் அடுத்த நான்கு ஆண்டுகளில் கூடுதலாக 8.1 பில்லியன் டொலர்கள் செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# சபாநாயகருக்கு எதிராக தொடரும் தாக்குதல்கள்

ஒன்ராரியோ, மே 30

கன்சர்வேட்டிவ் அரசியல்வாதிகள் சபாநாயகர்களின் சுதந்திரத்திற்கு எதிரான தாக்குதல்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன என லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சி என்பன தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் கன்சர்வேடிவ் கட்சியினர் மூன்றாவது முறையாக நாடாளுமன்ற சபாநாயகர் கிரெக் ஃபெர்கஸை பதவி விலக்க முயற்சித்து தோல்வியடைந்த ஒரு நாளின் பின்னர் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

அவர்களின் முயற்சிகள் நாடாளுமன்றச் செயற்பாடுகளை மிரட்டுவதற்கும் தாமதப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று அரசாங்க அவைத் தலைவர் ஸ்டீவன் மெக்கின்னன் கூறியுள்ளார்.



# விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவ முயன்றவரின் வாகனத்தையே கொள்ளையிட்டுச் சென்றனர்

கனடாவில் விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவ முயற்சித்த ஒருவரது வாகனம் விபத்தில் சிக்கியவர்களாலேயே கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

ரொறன்ரோ வடக்கு 400 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் ட்ரக் வண்டிகளும் பிக்கப் ட்ரக் வண்டியொன்றும் மோதிக் கொண்டுள்ளன.

வாகனங்கள் விபத்துக்குள்ளானதை பார்த்த நபர் ஒருவர் தனது வாகனத்திலிருந்து இறங்கிச் சென்று உதவ முற்பட்டுள்ளார்.

இதன் போது விபத்துக்கு உள்ளான வாகனத்தில் இருந்தவர்கள் அவசரமாக வெளியேறி, உதவ முன்வந்தவரது வாகனத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

விபத்துக்குள்ளான பிக்கப் ரக வாகனமும் ஏற்கனவே களவாடப்பட்டே கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் இவ்வாறு வாகனத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கன்சர்வேடிவ் தலைவர் சமர்ப்பித்த வீட்டுவசதி சட்டமூலம் தோற்கடிப்பு

ஒன்ராரியோ, மே 30

கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலியவ்வின் வீட்டுவசதி சட்டமூலம் நாடாளுமன்றத்தில் லிபரல், புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் புளொக் கியூபெக் கட்சியினரால் தோற்கடிக் கப்பட்டது.

பொலியவ்வினால் செப்டம்பர் மாதத்தில் நாட்டின் வீட்டு நெருக்கடியை சமாளிப்பதற்கான திட்டமாக இந்தச் சட்ட மூலத்தை அறிமுகப்படுத்தினார்.

வீட்டு வசதியில் கவனம் செலுத்துவது பொதுக் கருத்துக் கணிப்புகளில் கன்சர்வேட்டிவ் கட்சியின் ஆதரவை அதிகரிக்க உதவியது.

இந்த சட்டமூலத்தின் மைய முன்மொழிவு, நகரங்கள் தங்கள் வழக்கமான உள்கட்டமைப்பு செலவினங்களைப் பெற ஒவ்வொரு ஆண்டும் 15 சதவிகிதம் வீடு கட்டுவதை அதிகரிக்க வேண்டும்.

இரண்டாவது வாசிப்பு வாக்கெடுப்பில் சட்டமூலம் 203க்கு 117 என்ற கணக்கில் தோற்கடிக்கப்பட்டது.





# பெரு நகரங்களிலிருந்து கனேடியர்கள் இடம்பெயரத் தயாராகி வருகின்றனராம்

## குடியிருப்புகளுக்கான விலை அதிகரித்து வருவதால்

குடியிருப்புகளுக்கான விலை அதிகரித்து வருவதால், நாட்டின் பெரு நகரங்களில் வசிக்கும் சரிபாதி கனேடியர்கள் இடம்பெயரத் தயாராகி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ரொறன்ரோ, மாண்ட்ரீல் மற்றும் வான்கூவர் போன்ற பெரிய பிராந்தியங்களில் வசிப்பவர்களில் ஐம்பது சதவீதம் பேர், தங்களுக்கு வேலை கிடைத்தால், விலை மலிவான நகரங்களில் வீடு வாங்குவது குறித்து பரிசீலிக்கின்றனர் எனக் கூறியுள்ளனர்.

வாடகைக்கு குடியிருப்பவர்களில் 60 சதவீதம் பேர்கள் இடம்பெயர முடிவு செய்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். குறைந்த தொகைக்கு குடியிருப்பு கிடைப்பது என்பது தற்போதைய சூழலில் சிக்கலாக உள்ளது என்பதுடன், கொரோனா பெருந்தொற்றானது மக்களை தங்கள் வசதிக்கு ஏற்ற வாழ்க்கை வாழவும் கற்றுக்கொடுத்துள்ளது என நிபுணர்கள் தரப்பு கூறுகின்றனர்.

மேலும், தற்போது வேறு நகரங்களுக்கு குடிபெயர முடிவு செய்துள்ளனர் எனக் கூறும் பலரும் தங்கள் முடிவை மாற்றவும் வாய்ப்புள்ளதாக குறிப்பிடுகின்றனர். கிரேட்டர் ரொறன்ரோ பகுதியில் வசிக்கும் மக்களில் 51 சதவீதம் பேர்கள் இடம்பெயர வேண்டும் எனத் திட்டமிட்டு வருகின்றனர்.

கிரேடர் மாண்ட்ரீல் பகுதி மக்களில் 54 சதவீதம் பேர்கள் மற்றும் கிரேட்டர் வான்கூவர் பகுதியில் 45 சதவீதம் மக்கள், மாண்ட்ரீல் பகுதி மக்களுக்கு கியூபெக் சிட்டி முதன்மைத் தெரிவாக உள்ளது.

ரொறன்ரோ மற்றும் வான்கூவர் பகுதி மக்கள் எட்மண்டன் பகுதியை தெரிவு செய்துள்ளனர். கனடாவில் பொருளாதார வசதிக்கு ஏற்ற நகரங்கள் பட்டியலில் ஒன்றாறியோவின் Thunder Bay முதலிடத்தில் உள்ளது.

இரண்டாவது இடத்தில் Saint John. அடுத்து Red Deer, கியூபெக்கின் Trois-Rivières, எட்மண்டன், ரெஜினா, St. John's, கியூபெக் சிட்டி, Sherbrooke மற்றும் வின்னிபெக் ஆகிய 10 நகரங்கள் மக்களின் விருப்பமாக உள்ளது.